## வரையறுக்கப்பட்ட லங்கா சீமெண்ட் லிமிட்டட - 2017

---

வரையறுக்கப்பட்ட லங்கா சீமெந்து பீஎல்சீ கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இவ் அறிக்கைத் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயலாற்றல் மீதான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாக உள்ளது.

### 1.3 தொடர்ந்து இயங்கும் தன்மை

---

சீமெந்தை உற்பத்தி செய்தல், சீமெந்தை இறக்குமதி செய்து விநியோகித்தல் மற்றும் உற்பத்திப்பொருட்களுடன் தொடர்புபட்ட சீமெந்தை உற்பத்தி செய்தல் உள்ளடங்கான 33 நோக்கங்கள் கம்பனியின் அமைப்பு அகவிதிதியின் பிரகாரம் கம்பனியின் பிரதான நோக்கங்களாக குறிப்பிடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை கடந்த சில வருடங்களினுள் நிலவிய போரினால் முழுமையாக அழிக்கப்பட்டிருந்ததுடன் கம்பனியின் தொழிற்பாடுகள் சீமெந்தை இறக்குமதி செய்து விற்பனை செய்வதற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

ஏற்கனவேயுள்ள நிலைமையுடன் 2016 ஆம் ஆண்டில் அரச நிறுவனங்களின் மீள்கட்டமைப்பின் கீழ் இழப்பீட்டுக் கொடுப்பனவு மூலம் ஊழியர்கள் சேவையிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்டிருந்தனர். ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஒரு உத்தியோகத்தர் மாத்திரம் அறிக்கைத் திகதி வரையிலும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். எவ்வாறாயினும் சீமெந்து இறக்குமதி 2017 மார்ச் மாதத்திலிருந்து கைவிடப்பட்டிருந்ததுடன் சீமெந்து தொழிற்சாலை அமைந்துள்ள காணியின் குத்தகைக் காலப்பகுதி 2012 ஆம் ஆண்டில் காலாவதியாகியிருந்தது.

மேலும் 1984 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை (2008 ஆம் ஆண்டு தவிர) தொடர்ச்சியாக கம்பனி ரூபா 15,322,215,025 கூட்டுமொத்தமான நட்டங்களை பெற்றிருந்ததுடன் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 628,478,493 மற்றும் 634,157,397 தொகையான எதிர்மறை தேறிய சொத்துக்கள் நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் மேற்குறிப்பிடப்பட்ட நிலைமை கம்பனியின் தொடர்ந்து இயங்கும் தன்மையின் மீது பாதகமாக தாக்கமளித்திருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களினுள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு வருடாந்த அறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனியின் 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு வருடாந்த அறிக்கை என்பன இவ் அறிக்கைத் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் மீளாய்வாண்டு தொடர்பான கம்பனியின் கணக்குப் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்காததுடன் காணன்னாளரொருவரின் உதவியை பெற்றுகெ்கொள்ளாதமை கணக்குகளை சமர்ப்பிப்பதிலுள்ள தாமதத்திற்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 சொத்துக்கள் பொறுப்புக்களின் உள்ளதன்மை

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டள்ள சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| **சொத்துக்கள்** | **பெறுமதி** |
|---|---|
| | **ரூபா** |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 230,229,406 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 45,021,489 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **275,250,895** |
| **பொறுப்புக்கள்** | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 76,192,007 |
| நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | 833,216,284 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **909,408,291** |
| தேறிய மூலதனம் மற்றும் ஒதுக்கீட்டுப் பற்றாக்குறை | (634,157,396) |
| மொத்த வருமானம் | 36,019,576 |
| மொத்த செலவினம் | 41,698,481 |
| **ஆண்டிற்கான பற்றாக்குறை** | **(5,678,905)** |

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் செலுத்த வேண்டிய வியாபார புரள்வு வரி, பொருளாதார சேவைக் கட்டண வரி, செலுத்த வேண்டிய வருமான வரியாக ரூபா 8,831,890 கூட்டுமொத்தத் தொகையை மீளாய்வாண்டின் இறுதித்திகதி வரையிலும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 133(1) ஆம் பிரிவின் (அ) மற்றும் (ஆ) உபபிரிவுகள் | கணக்காண்டு முடிவடைந்து 06 மாதங்களினுள் வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும், 2017 ஆம் ஆண்டிற்கான பொதுச் சபைக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் நிதிப் பிரமாணம் 104 | வரிசை அமைச்சினால் கம்பனியின் தலைவரிற்கு வழங்கப்பட்டிருந்த 02 மோட்டார் கார்கள் விபத்துக்குள்ளாகியிருந்த போதிலும் இது தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவு | 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரை கம்பனியால் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அத் திட்டம் கம்பனியின் நிதி நிலைமை மற்றும் மீள்கட்டமைப்பு வழிகாட்டிகளிற்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்காதமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்திற்குச் சொந்தமான தற்போதைய வளங்கள், முகாமைத்துவ திறமை மற்றும் தொழில்நுட்ப அறிவு, அமைப்புக் கட்டமைப்பு, முன்னைய 03 ஆண்டுகளின் செயற்பாட்டு பெறுபேறுகள், செயலாற்றல் போன்ற பிரதான காரணிகள் அதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியல்படுத்தப்பட்ட விதிகளின் 7.4(இ) பிரிவு | கம்பனியால் 2014 செப்தெம்பர் தொடக்கம் 2016 செப்தெம்பர் வரை சரியான இடைக்கால நிதிக்கூற்றுக்களை கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்திற்கு சமர்ப்பிக்கப்படாததனால் கம்பனியின் பிணைமுறிச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நட்டம் ரூபா 2,369,264,877 தொகையானதுடன் அத் திகதியிலுள்ளவாறான கம்பனியின் தேறிய சொத்துக்கள் ரூபா 634,157,396 தொகையாகும். இதனால் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 220 ஆம் பிரிவின் பிரகாரம் 20 நாட்களினுள் பங்குதாரர்களின் விசேட கூட்டமொன்றிற்காக அழைப்பதன் மூலம் மேற்படி விடயங்கள் மீதான அறிவூட்டல் அதிகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் இவ் அறிக்கைத் திகதி

வரையிலும் பணிப்பாளர் சபையினால் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஒக்தோபர் 20 ம் திகதிய பிஈ/ஆர்ஈஎஸ்/வீஆர்எஸ்-1-2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் மீள்கட்டமைப்பு செயன்முறையின் பின்னர் ''கம்பனியிலுள்ள சீமெந்துக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 62.45 சதவீத பங்குகள் மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான 12.82 சதவீத பங்குகள் பங்குச் சந்தையில் விற்பனை செய்யப்பட்டு அரசாங்கத்திற்கு வருமானம் வழங்கப்படுவதற்கும்'' பொதுத் திறைசேரியால் மீள்கட்டமைப்பிற்காக வழங்கப்பட்ட பணத்தை மீள்நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காங்கேசன்துறையில் அமைந்துள்ள சீமெந்து தொழிற்சாலை மற்றும் அச் சொத்துக்களின் பெறுமதியாக ரூபா 229,957,152 தொகை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சில ஆண்டுகளிற்கு முன்னர் அச் சொத்துக்கள் அழிக்கப்பட்டிருந்ததுடன் இவ் அறிக்கைத் திகதி வரையிலும் நியாயமான பெறுமதியை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்ட சீமெந்து தொழிற்சாலையொன்றை ஸ்தாபிக்கும் பிரதான தொழிற்பாட்டிற்காக மீளாய்வாண்டில் ரூபா 450,400 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் கம்பனியின் தற்போதைய நிதி சிக்கல்கள் மற்றும் இழப்பீட்டுக் கொடுப்பனவு மூலம் சேவையிலிருந்து ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்ட பின்னர் பொதுத் திறைசேரியால் கம்பனிக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் இவ் முன்மொழிவுகள் அமுல்ப்படுத்தப்பட முடியாதிருந்ததுடன் ஏற்பட்ட அச் செலவினம் பயனற்ற செலவினம் ஒன்றாகியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் தாமதக்கட்டணங்களாக ரூபா 1,328,526 கூட்டுமொத்தத் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுபாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு மற்றும் நிதிக் கட்டுப்பாடு | முறையான நிதிசார் கட்டுப்பாட்டு நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்படாமை, வரி மற்றும் கடன்கள் போன்ற அவசியமான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாமை, வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் சரியாகவும் நாளதுவரையாகவும் தயாரிக்கப்பட்டிருக்காமை. |
| (ஆ) நிலையான சொத்துக்கள் | நிலையான சொத்துக்களின் பதிவேடுகள் பேணப்படாமை, |

| | | |
|---|---|---|
| | கட்டுப்பாடு | பொருள் மெய்மையாய்வுச் சபையினை நியமனம் செய்து சொத்துக்கள் மெய்மையாய்வு செய்யப்படாமை தொழிற்சாலை உள்ளடங்கலாக சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்படாமை. |
| (இ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை மற்றும் அது தொடர்பான அறிக்கைகள் முறையாகவும் விபரமாகவும் பேணப்படாமை. |